மறுநாள் நாங்கள் வந்த நண்பரின் காரிலேயே பிரயாணம் மேற்கொண்டோம். நேராக திருநெல்வேலி, தென்காசி மார்க்கமாகக் குற்றாலம் சென்றோம். அங்கு நண்பரின் பங்களா ஒன்று குற்றாலம் மலைமீது இருக்கிறது. நாங்கள் அங்குத்தான் தங்கினோம். தலையில் சந்தனாதித் தைலத்தை நன்றாகத் தேய்த்துக் கொண்டு அருவியில் ஸ்நானம் செய்யப்போனோம். ஸ்நானம் செய்யுமிடத்தில் பாதுகாப்புக்காக மிகவும் பந்தோபஸ்தாக இரும்புக் கம்பிகளால் வேலி போல் போட்டிருக்கிறார்கள். ஆண்களுக்கு வலதுபக்கமும், பெண்களுக்கு இடதுபக்கமும் ஒதுக்கப்பட்டிருக்கிறது. அருவியில் ஸ்நானம் செய்யும் போது என் மனமடைந்த கிளுகிளுப்பும் ஆனந்தமும் எழுத இயலாது. எண்ணெய் வைத்த தலையில் சிறிதுகூட எண்ணெய்ப் பசை இல்லாமல், சில்க் துணியைத் தடவும்பொழுது எந்த உணர்ச்சி ஏற்படுமோ, அவ்வளவு மிருதுவாகவும், பட்டுப்போன்றும் இருந்தது. உடை மாற்றுவதற்குத் தனியாக ஒரு அறை இருக்கிறது. அதில் நாங்கள் உடைமாற்றிக்கொண்டு மேலே நடந்தோம். அருவி அமைந்திருக்கும் அழகைக் கண்டேன். சுமார் ஒரு பனையளவு உயரத்திலிருந்து அருவி கீழே விழுகிறது. மழைத் தண்ணீரும் ஆற்றுத் தண்ணீரும் வெகு தொலைவிலிருந்து மலையில் தொடர்ந்து வருகிறது. வரும் வழியில் பெரும் பள்ளம் ஒன்று உள்ளது. அதில் இந்த ஜலமெல்லாம் விழுகிறது. தண்ணீரால் அடித்துக்கொண்டு வரும் கல், மண் மற்றும் முள்ளவைகள் அப்பள்ளத்தில் விழுகின்றன. அப்பள்ளத்தில் ஓசையுடன் விழும் ஜலம் பொங்கி வழிந்து, மலை வழியாக அருவியாக விழுகிறது. இந்தப் பள்ளத்தைப் 'பொங்குமா கடல்' என்கிறார்கள் இதுதான் கல் முதலியவைகளைத் தன்னகத்தே கொண்டு, வெறும் தண்ணீரை மட்டும் அருவியில் ஸ்நானம் செய்பவர்களுக்கு அனுகூலமாகக் கொடுக்கிறது. இந்தப் பள்ளம் மட்டும் இல்லையானால் மலை வழியாக வரும் மார்க்கத்தில் தண்ணீரில் உருண்டோடிவரும் கல்லும், மண்ணும் குளிப்போரின் மண்டையைப் பதம் பார்த்துவிடும். ஆண்டவனின் அற்புத அமைப்பை எண்ணி இந்த இயற்கையில் மெய்சிலிர்த்தேன். ஐந்தருவி, தேனருவி முதலியவைகளையெல்லாம் சுற்றிப்பார்த்து விட்டுத் திரும்பும் வழியில் அருவியின் அருகில் அமைந்திருக்கும் குற்றாலநாதர் கோவிலுக்குச் சென்று தரிசனம் செய்தோம். அங்கு, கோவிலில் ஒரு பலாமரம் இருக்கிறது. மரத்தின் வேரில் இரு பெரிய பலாப் பழங்களைப் பார்த்தேன். அப்பலா மிகவும் ருசியாக இருக்குமென்று கூறினார்கள். அங்குச் சீதோஷ்ணம் என் மனத்திற்கு மிகவும் பிடித்திருந்தது. சாரல் பெய்யும் பொழுது நனைந்த உடைகள் உடனேயே காயும் வெயிலால் உலர்ந்துவிடும். சாரல் பெய்யும் பொழுது நடந்து போவதே மனதிற்கு மகிழ்ச்சியைத்தரும். அங்கு ஒரு வாரம் தங்கி இயற்கையின் எழிலைக்கண்டு களித்தோம்.

இந்த இன்பப் பயணம் என்னொத்த வகுப்பு மாணவிகளுடன் குதூகலமாகச் செல்லும்பொழுது எவ்வளவு ஆனந்தமாக இருக்கும் என்று எண்ணுகிறேன். மறுபடியும், எப்பொழுதாவது என் வகுப்பில் உல்லாசப் பிரயாணத்திற்கு ஏற்பாடு செய்யும் பொழுது இவ்விரண்டு இடங்களையும் சொல்லி, சக மாணவிகளோடு போகும் காலத்தை எதிர்பார்க்கிறேன்.

A. சூடாமணி,
ஐந்தாம் படிவம், 'ஊ' பிரிவு.

ஒரு நாள்

மிகச் செட்டாகவும் கட்டுப்பாடுடனும் செலவிடவேண்டியது பணம் மட்டுமல்ல. மனிதனுக்கு ஒரு தினம் பிறப்பு—மற்றொரு தினம் இறப்பு. இந்த இரு தினங்களுக்கும் இடையேயுள்ள காலந்தான் மனிதனின் ஆயுள். ஒரு சுவரை எப்படி அநேக கற்களைக்கொண்டு கட்டுகிறார்களோ அது போல் தினங்களான அநேக கற்களால் 'ஆயுள்' என்னும் சுவர் கட்டப்படுகிறது. ஒவ்வொரு கல்லின் சக்தியும் அழகும் எப்படிச் சுவருக்குச் சக்தியையும் கண்ணுக்கு ரம்மியத்தையுமளிக்கிறதோ அதுபோலவே ஒவ்வொரு தினத்திலும் நம் வாழ்க்கையை நடத்தும் தரம் ஆயுளுக்கு அழகையும், உயர்வையும் அளிக்கிறது. சுவரைக்கட்டும் போது நாம் ஒவ்வொரு கல்லையும் சோதித்துப் பார்த்து உபயோகித்தால் எப்படிச் சுவரைப்பற்றிக் கவலைப்பட வேண்டாமோ அதுபோலவே ஒவ்வொரு தினத்தையும் நாம் உத்தம ரீதியில் கழித்தால் நம்முடைய வாழ்க்கையைப்பற்றிக் கவலைப்பட வேண்டியதில்லை!

நாம் வாழ்க்கையில் நடத்தும் எக்காரியத்தைப் பற்றியும் நன்றாக யோசனை செய்கிறோம். அதுபோலவே ஒவ்வொரு தினத்தைக் கழிப்பதைப்பற்றியும் யோசனை செய்ய வேண்டும். ஒவ்வொரு தினமும் நமக்குக் கிடைப்பது 24 மணி நேரந்தான். அதில் 8 மணி நேரம் நாம் தூக்கத்தில் செலவிடுகிறோம். மற்ற நேரத்தில் ஒரு பங்கை ஆகாரம், தினசரி அலுவல்கள் இவற்றிற்காகச் செலவிடுகிறோம். அதை மூன்று மணி நேரம் என வைத்துக் கொள்வோம். இவை போக மற்ற நேரங்களில் நாம் என்ன செய்வது? இந்த நேரத்தை நாம் எப்படிக் கழிக்கிறோமோ அதையொட்டியே நம் வாழ்க்கையின் சுகம், துக்கம், வெற்றி, தோல்வி, லாபம், நஷ்டம் இவை அமையும்.

100க்கு 99 பேர் வயிற்றுப் பிழைப்புக்காக விருப்பு, வெறுப்பென்று பாராட்ட வசதியற்று ஏதாவது வேலைக்குப் போகவேண்டியிருக்கிறது. பிறருடைய கட்டுப்பாடுகளுக்கு இணங்கித் தினந்தோறும் ஏழு மணி நேரமாவது செலவிடுகிறோம். மனிதனுக்கும் மற்றப் பிராணிகளுக்குமுள்ள வித்தியாசம் என்ன? பகுத்தறிவு அல்லவா? பகுத்தறிவைப் பெறக் கிடைக்கும் சந்தர்ப்பத்தை நாம் வீணாக்கக்கூடாதல்லவா?

சென்ற இருபத்தைந்து வருஷங்களில் மனிதனின் அறிவை வளர்ப்பதற்கான வசதிகள் அதிகரித்ததற்கு அளவில்லை. இலக்கியம், விஞ்ஞானம், சரித்திரம் முதலிய துறைகளில் வெளியாகி இருக்கும் நூல்கள் கணக்கிலடங்கா. இன்னும் அவை அதிகரித்துத்தான் வருகிறது. நம் அறிவை வளர்ப்பதற்காக நாம் இவைகளைப் படித்தல் வேண்டும். தினந்தோறும் ஒரு மணி நேரமாவது உலக விவகாரங்களைப் பத்திரிகை மூலம் படித்தறிந்து கொள்ளல் வேண்டும். அறிவு பெற்றால் மட்டும் போதுமா? மனிதனுக்குப் பொழுது போக்கும் தேகப்பயிற்சியும் இன்றியமையாதன அல்லவா? ஆகவே தினந்தோறும் தேகப்பயிற்சி செய்ய வேண்டும். தவிர இவற்றை எல்லாம் செலவழித்தபின் தினம் அரை மணி நேரத்தை யாவது நமக்கும் கடவுளுக்கும் உள்ள தொடர்பைப் பலப்படுத்துவதற்குப் பயன்படுத்த வேண்டும். இந்த அரைமணி நேரத்தில் வாழ்க்கையிலுள்ள கவலைகளனைத்தையும் மறக்க வேண்டும். நாம் நம் நேரத்தைக் கழிப்பதற்கு ஜாபிதா தயாரித்துவிட்டோம். "பயமற்று வாழ். ஒரு லக்ஷ்யத்தை நோக்கியே செல். உயர்ந்த நோக்கத்தைக் கைப்பிடி" என்று உபதேசித்த பொன்மொழிகளை நினைவில் வைத்து, கட்டுப்பாடுகளுடன் நேரத்தைக் கழித்தால் எதற்கும் நேரம் கிடைக்கும். நாம் ஒவ்வொரு தினமும் நேரத்தைக் கழித்த விதத்தைச் சிந்தனை செய்து நோக்கின் நமக்கு அது மகிழ்ச்சியளிக்க வேண்டும். சில தினங்கள் முயற்சித்தால் இது மிகவும் எளிதாகத் தோன்றும் சாதனைதான்!

S. சாந்தா,
ஆறும் படிவம், 'அ' பிரிவு

கன்யா குமரி

கன்யா குமரி என்றவுடனேயே இந்தியாவின் தென்முனை என்று பளிச்சென்று யாவரும் கூறிவிடுவர். இது வடக்கைத் தவிர மற்ற மூன்று பக்கங்களிலும் கடலால் சூழப்பட்டிருக்கிறது. அதாவது இங்கு வங்காள விரிகுடா, அரபிக்கடல், இந்துமஹா சமுத்திரம் ஆகிய மூன்றும் ஒன்றுசேர்ந்து இருக்கின்றன. எனவே இங்குச் சூரியன் உதிப்பது, அஸ்தமிப்பது ஆகிய இரு காட்சிகளையும் காணலாம். பௌர்ணமி தினத்தன்று சூரியன் மறையும் தருணத்தில் சந்திரன் உதிப்பதைக் காண்பது கண்கொள்ளாக் காட்சியாக இருக்கும். இதைக் காண்பதற்கென்றே இந்தியாவின் பல பாகங்களிலிருந்தும் யாத்ரிகர்கள் இங்கு வருகின்றனர். மேலும் இந்துக்களுக்கு இது ஒரு புண்ணிய ஸ்தலமாக விளங்குகிறது.

நாங்கள் திருவனந்தபுரத்திற்குச் சென்றிருந்த பொழுது அங்கிருந்து ஐம்பத்து நான்கு மைல் தூரத்திலுள்ள கன்யா குமரிக்கும் செல்வதென்று நிச்சயித்தோம். காலையில் காரில் ஏழுமணிக்குப் புறப்பட்டோம். சாலையின் இரு பக்கங்களிலுமுள்ள அழகிய கடைவீதிகளையும், சிறு கிராமங்களையும், பல இயற்கைக் காட்சிகளையும் கண்டு ரசித்தவாறே நாகர்கோயில், சுசீந்திரம் என்ற ஊர்களின் வழியாக ஒன்பது மணிக்குள் கன்யா குமரியை அடைந்து விட்டோம்.

நாங்கள் வந்த பாதை அங்கு முடிவடைந்து விடுகிறது. எதிரே இருந்த பிரும்மாண்டமான கடல் தன் கரங்களை உயரே வீசி எங்களை வரவேற்பது போன்று காட்சியளித்தது. எங்களை அறியாமலேயே உடல் சிலிர்த்தது. விவரிக்க இயலாத ஒரு நூதன உணர்ச்சி உடலெங்கும் பரவியது.

கடலில் சிறிது தூரம்வரை பாறைகள் இருக்கின்றன. பாறையைத் தாண்டிவரும் தண்ணீரைத் தேக்கி, சிறுகுளம் போல் படிக்கட்டுகள் கட்டி குளிப்பதற்குச் சௌகரியமாகச் செய்திருக்கிறார்கள். அதே சமயம் பாறையைத் தாண்டி வரும் அலைகள் மோதுவதால் கடலில் குளிப்பது போலவும் இருக்கிறது. அலை இழுத்துச் சென்று விடுமே என்ற கவலையின்றிச் சிறு குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரையில் யாவரும் இங்கு நீராட வசதியாக இருக்கிறது. உடை அணிந்து கொள்ளவும் வசதியாக ஆண்களுக்கென்று ஒரு மண்டபமும், பெண்களுக்கு என்று அறைகளும் கட்டப்பட்டிருக்கின்றன.

கடற்கரையோரத்திலேயே கோயில் இருக்கிறது. ஆனால் கடலை நோக்கி இருக்கும் வாயிற்கதவு திறக்கப்படாமல் வடக்குப் பக்கமிருக்கும் வாயிற்கதவே திறக்கப்பட்டிருக்கிறது. கடலில் நீராடிய பின் கோயிலுக்குச் சென்றோம். மின்சார விளக்குகள் இன்றியே ஒரு இடத்தை மிக்க அழகுறச் செய்யலாம் என்பதை நிரூபிப்பதற்காகவோ என ஐயுறும்படி கோயிலை குத்துவிளக்குகளையும், அகல் விளக்குகளையும் வரிசை வரிசையாக ஏற்றிவைத்து அலங்கரித்திருந்தனர்.

இவைகளைக் கண்டு களித்தவாறே சன்னிதிக்குள் நுழைந்தோம். அங்கு சுமார் நான்கு அல்லது ஐந்து அடி உயரமுள்ள ஒரு கன்னி தெய்வீகக் களையுடன் பட்டாடைகளையும், ஆபரணங்களையும் அணிந்து கொண்டு நின்றுகொண்டிருந்தாள். பார்ப்பதற்குச் சிலைபோன்றே தோன்றவில்லை. ஆனால் இதென்ன! அக்கன்னியின் மூக்கில் மிகவும் ஒளி வீசும் ஒரு விளக்கு எதற்கு? நாங்கள் தரிசனம் செய்தபின் அபிஷேகம் செய்வதற்காக ஆபரணங்களையெல்லாம் கழற்றினர். அப்பொழுதுதான் தெரிந்தது அது விளக்கல்ல என்று. ஆஹா! அவ்வளவு ஒளி வீசுவது ஒரு மூக்குத்தியா! ஆம். இது புகழ்ச்சி அல்ல, உண்மையே.

அப்பொழுது அங்கு ஒருவர் அம்மூக்குத்தியின் பெருமையைக் கூறினார். முதன் முதலில் அங்குக் கடற்கரையை நோக்கியுள்ள வாயிற்கதவு திறக்கப்பட்டுத்தான் இருந்தது. ஒரு நாள் இரவு கடலில கப்பல் ஓட்டிக்கொண்டிருந்த மாலுமி இம் மூக்குத்தியின் ஒளியைககண்டு அது ஒரு துறைமுகப்பட்டினம் என்று நினைத்துக் கப்பலை

நிறுத்தி விட்டானாம். அதனால் கப்பல் கடலில் மூழ்கி, மிகவும் சேதம் ஏற்படவே அந்த வாயிற்கதவை மூடிவிட்டு வடக்குப் பக்கத்திலிருக்கும் வாயிற்கதவைத் திறந்தார்களாம். இது உண்மையாக நடந்ததா என்று தெரியாது. ஆனால் அந்த மூக்குத்தியைப் பார்த்தவர்கள் இதை நம்பாமல் இருக்க முடியாது. இத்தலத்தைப் பற்றிய வரலாறு:

சுசீந்திர நாட்டை வெகுகாலத்திற்கு முன்பு ஆண்டுவந்த அரசனுக்கு மிக்க அழகும், நற்குணங்களும் பொருந்திய ஒரு பெண் இருந்தாள். அவளை மணக்க பலராஜ குமாரர்கள் முன்வந்தனர். ஆனால் அவளோ மணம் செய்து கொள்ளச் சிறிதும் விரும்பவில்லை. எல்லோரும் வற்புறுத்தவே அவள் திருமணத்திற்கு வேண்டிய ஏற்பாடுகளையெல்லாம் செய்யச் சொன்னாள். எவனொருவன் காம்பில்லாத வெற்றிலை, கணு இல்லாத கரும்பு, கண் இல்லாத தேங்காய் ஆகிய மூன்றையும் மறுநாள் பொழுது புலர்வதற்குள் கொண்டு வருகிறானோ அவனைத் தான் மணந்து கொள்வதாக உறுதி கூறினாள். எங்காவது கணு இல்லாத கரும்பு, காம்பில்லாத வெற்றிலை, கண்ணில்லாத தேங்காய் ஆகியவைகள் கிடைக்குமா? எனவே எவராலும் கொண்டுவர இயலவில்லை. மறுநாள் பொழுது புலர்ந்ததும் அக்குமரி தன் திருமணத்திற்கென்று வாங்கிவைத்திருந்த அரிசி, பருப்பு முதலிய எல்லாப் பொருள்களையும் கடலில் வீசி எறிந்து, அவைகளை மண்ணாகப் போகும்படி சபித்துவிட்டுத் தானும் சிலையாக நின்று விட்டாள்.

இப்பொழுதும் அங்குக் கடல் மண்ணில் அரிசி போன்ற பொடிக் கற்களும் காய்கறிகளைப் போன்ற பல உருவங்களும் கிடைக்கின்றன. யாவரும் கண்டு களிக்கவேண்டிய ஒரு அழகிய தலம் கன்யா குமரி.

எம். என். லக்ஷ்மி,
(பழைய மாணவி)

கிராமம்

கொஞ்சம் வீடுகள் கட்டியிருக்கும் இடமே கிராமம் ஆகும். கிராமங்களில் பல இயற்கைக் காட்சிகளைக் காணலாம்; வளம் மிக்க வயல்களைக் காணலாம். சுகாதாரத்திற்கு ஏற்றது கிராமம் என்பார்கள் பெரியோர்கள். பல தென்னை மரங்களும் பனை மரங்களும் நதிகளும் காணலாம். கிராமத்தை நாம் சுத்தமாக வைத்துக்கொள்ளவேண்டும். அப்படியில்லாமல் சில கிராமங்களை அசுத்தமாக வைத்துக் கொள்கிறார்கள். அதனால் பல நோய்கள் பரவ ஆதாரமாக இருக்கின்றது. அசுத்தம் சேர்ந்தபோது கிராம மக்கள் ஒன்றுகூடிச் சுத்தம் செய்ய வேண்டும். அங்குள்ள குழந்தைகளுக்குக் கல்வி கற்பிக்க வேண்டும். நீர் நிலைகளை சுத்தமாக வைத்துக் கொள்ளவேண்டும்.

சில கிராமங்களில் உள்ள மக்கள் குளம், குட்டை, இவைகளை அசுத்தம் செய்யாமல், சுத்தமாக வைத்துக்கொள்வார்கள். இங்குள்ள மக்கள் தானியங்களையும், காய்கறிகளையும் தாங்களே பயிரிட்டு வளர்த்து தமக்கு வேண்டிய அளவை எடுத்துக் கொள்வார்கள். மீதியைப் பிறருக்கு விற்று விடுவார்கள். தங்கள் வீடுகளிலேயே மாடுகளை வளர்த்து அதிலிருந்து பால், தயிர் வெண்ணெய் முதலியவற்றை எடுத்து விற்று, அவைகளினால் கிடைக்கும் பொருளைக் கொண்டு தங்கள் வாழ்க்கையை நடத்திக் கொள்வார்கள்.

கிராம மக்கள் தங்கள் கிராமத்தை இன்னும் நன்றாகச் சுத்தமாக வைத்துக் கொள்ள தெரிந்து கொள்ளவேண்டும். வைத்திய வசதி, படிப்பு வசதி முதலியவைகளையும் அவர்கள் கவனிக்கவேண்டும்.

N. சந்திரலேகா,
D. வேதவல்லி,
முதல் பாரம், 'ஆ' பிரிவு.

தெரிந்து கொள்ளுங்கள்!!

உலக ஆராய்ச்சிகள்

	ஆராய்ச்சிகள்	ஆராய்ச்சி செய்தவர்	தேசத்தவர்	கண்டுபிடித்த வருடம்
1.	தூரதிருஷ்டிக் கண்ணாடி	கலிலியோ	இத்தாலி	1593
2.	வாயுமானி	டோரிஸெல்லி	இத்தாலி	1643
3.	கடியாரம்	ஹூகின்ஸ்	நெதர்லாந்து	1656
4.	தெர்மா மீட்டர்	பாரன்ஹீட்	பிரான்ஸ்	1721
5.	நீராவி இயந்திரம்	ஜேம்ஸ்வாட்	இங்கிலாந்து	1765
6.	நீராவிக் கப்பல்	வெளல்டன்	அமெரிக்கா	1801
7.	நீராவி ரயில் என்ஜின்	ஸ்டீபென்ஸன்	இங்கிலாந்து	1829
8.	தையல் இயந்திரம்	திம்மோனியர்	பிரான்ஸ்	1830
9.	டைனமோ	பாரடே	இங்கிலாந்து	1831
10.	பைஸைகில்	மாக்மில்லன்	ஸ்காட்லாந்து	1840
11.	குளோரோபாரம்	ஸிம்பஸ்ன்	ஸ்காட்லாந்து	1847
12.	பௌண்டன் பேனா	வாட்டர்மன்	அமெரிக்கா	1864
13.	டைப்ரைட்டர்	ஷோல்ஸ்	அமெரிக்கா	1868
14.	டெலிபோன்	கிரஹாம்பெல்	அமெரிக்கா	1876
15.	கிராமபோன்	எடிஸன்	அமெரிக்கா	1876
16.	மைக்ரோபோன்	எமிலிடொலினர்	அமெரிக்கா	1877
17.	மின்சார விளக்கு	எடிஸன்	அமெரிக்கா	1878
18.	போட்டோ பிலிம்	ஈஸ்ட்மன்	அமெரிக்கா	1883
19.	எக்ஸ்ரே	ராண்ட்ஜன்	ஜெர்மனி	1895
20.	கம்பில்லா தந்தி	மார்க்கோனி	இத்தாலி	1895
21.	ரேடியம் (உலோகம்)	மேடம்க்யூரி	இங்கிலாந்து	1903
22.	ஆகாய விமானம்	ரைட்சகோதரர்	அமெரிக்கா	1903
23.	ஸேப்டிரேஸர்	கில்லெட்	அமெரிக்கா	1904
24.	டெலிவிஷன்	பெயர்ட்	இங்கிலாந்து	1926
25.	பென்ஸிலின் (மருந்து)	ஸர். அலெக்ஸாண்டர் பிளெமிங்	இங்கிலாந்து	1929

R. பத்மசுந்தரி
ஆரும் படிவம், 'உ' பிரிவு.

ஸ்ரீ தியாகராஜ சுவாமிகள்

தஞ்சாவூர் ஜில்லாவிலுள்ள திருவாரூரில் 1767-ஆம் வருஷம் மே மாதம் 4-ம் தேதி பூச நக்ஷத்திரத்தன்று கடக லக்கினத்தில் பிறந்தார்.

தஞ்சாவூர் சமஸ்தான ஸம்ஸ்கிருத கவியாகிய கிரிராஜ கவியின் புத்திரரான ராம பிரமத்தின் புத்திரர்தான் தியாகராஜர். இவருக்கு 8-ஆம் வயதில் உபநயனமும், 18-ஆம் வயதில் கல்யாணமும் நடந்தன. லௌகிகதானம், வைதிக கானம் இரண்டையும் பாடியிருக்கிறார். இவர் தினமும் தம் சிஷ்யர்களுடன் உஞ்ச விருத்திக்குச் சென்று வருவது வழக்கம். ராமப்ரம்மம் தினமும் காலையிலெழுந்து காவிரிக்குச் செல்லும் போது சொண்டி வெங்கடரமணய்யாவின் வீட்டு வழியாகச் சென்று வருவது வழக்கம். இப்படிச் செல்லுகையில் அவர் வீட்டில் ஸங்கீத வகுப்புகள் நடந்து வருவதைக் கவனித்தார். தம் மகனாகிய தியாகராஜருக்கும் ஸங்கீத ஞானம் இருப்பதைக்கண்டு வெங்கடரமணய்யாவிடம் அழைத்துச் சென்று அவரைச் சிஷ்யனாக ஏற்றுக் கொள்ளும்படி வேண்டினார்.

தியாகராஜர் சொண்டி வெங்கடரமணய்யாவிடம் ஒரே வருஷம் தான் சிஷ்யராயிருந்தார். ஒரு சமயம் ரமணய்யா தஞ்சாவூர் சமஸ்தான வித்வானாயிருந்தபொழுது தியாகராஜரை வித்வான்களின் சபையில் வந்து பாடும்படி கட்டளையிட்டார். இரவு 8-மணி முதல் 10-மணிவரை பாடுவதற்கு நேரம் நிர்ணயிக்கப்பட்டது. அப்பொழுது தியாகராஜர் காம்போஜி ராகத்தை மிக அழகாகப் பாடி முடித்தபின் மணியைப் பார்த்தால் விடியற்காலை மணி 4 ஆகியிருந்தது. பாடுகையிலே ஜனங்கள் யாவரும் கானரஸத்திலே மூழ்கியிருந்தனர். பின்பு ஜனங்கள் யாவரும் அரசனிடம் செல்லப் பயந்தனர். உடனே ரமணய்யா சரபோஜியிடம் சென்று விஷயத்தை விளக்கினார். சரபோஜி ராமப்ரம்மத்தின் மகனாகிய தியாகராஜனை அவ்வளவு சங்கீத ஞானமுள்ளவன் என்று வியந்ததோடு பல பரிசுகளையும் அளித்தார்.

ஒரு சமயம் ஹரிதாஸ் என்ற சன்யாசி தியாகராஜரிடம் வந்து ராம நாமத்தை 96 கோடி தடவை உச்சரிக்கும்படி சொல்லிச் சென்றார். அவ்வாறு அவர் சொல்லி முடித்ததும் யாரோ வாயிற்கதவைத் தட்டுவது போல் இருந்தது. உடனே இவர்போய் கதவைத் திறந்து பார்க்கையில் வந்த மூவரும் தியாகராஜரின் பூஜை இடத்துக்கு வந்து ஸ்ரீராம பட்டாபிஷேகக் காட்சியைத்தந்து மறைந்தனர். அப்பொழுது அவர் அடாணா ராகத்தில் 'பாலகனகமய' என்ற அனுபல்லவியுடன் கீர்த்தனையை ஆரம்பித்துப் பாடினார். இதுதான் இவருடைய முதல் கீர்த்தனை.

தியாகராஜர் 'விதுலகும் ரொக்கேதா' என்ற மாயாமாளவகௌளை கிருதியின் சரணத்தில் லக்ஷணக்காரர்களுடைய பெயர்களையெல்லாம் குறிப்பிடுகிறார். இவர் கிருதிகள் ஒவ்வொன்றும் மிக்க அர்த்தபுஷ்டியுள்ளது. கீர்த்தனைகளில் ஸங்கதி போடும் முறையைத் தியாகராஜர் தான் முதல் முதலாக நிர்ணயித்தார். தியாகராஜர் ராகங்களின் அமைப்பிலுள்ள சகலவிதமான பிரயோகங்களையும் கையாளுகிறார். மேலும் இவர் நவரஸ கன்னட, விஜயஸ்ரீ, பஹுதாரி, போன்ற அபூர்வ ராகங்களின் சாயைகளையும் அழகாக எடுத்துக்காட்டியுள்ளார். இவர் நௌகா சரித்திரம், திவ்ய நாம கீர்த்தனைகள், ஸீதா ராம விஜயம் முதலியவைகளை இயற்றியுள்ளார்.

தியாகையருடைய மகள் ஸீதாலக்ஷ்மியின் கல்யாணத்திற்குச் சிஷ்யர் வெங்கடரமண பாகவதர் ராம பட்டாபிஷேகப் படத்தை வரைந்து அதைப் பரிசளிக்க வாலாஜாபேட்டையிலிருந்து திருவையாற்றுக்கு நடந்துசென்றார். ஸ்ரீராமரே நடந்து வந்திருப்பதாகத் தியாகராஜர் எண்ணி அப்படத்தைப் பார்த்து மோகனராகத்தில் 'நனுபாலிம்ப நடசிவசித்வோ' என்று பாடினார். ஒருமுறை திருப்பதியில் கடவுளைத் தரிசிக்கப்போனபோது, அங்குத் திரைமூடியிருந்ததால், கௌளிபந்து ராகத்தில் 'தெரதீயகராதா' என்று பாடினார். உடனே திரைவிலகத் தியாகராஜருக்குத் தரிசனம் கிடைத்தது.

தியாகராஜர் ராமாயணத்தை 24,000 கீர்த்தனைகளாகப் பாடினார். இவர் மிக எளிமையான வாழ்க்கை நடத்தினார். உயர்ந்த நோக்கமுடையவர். ஒருசமயம் நாரதர் சன்யாஸி ரூபத்தில் வந்து 'ஸ்வரார்ணவமு' என்னும் புத்தகத்தைக் கொடுத்துச்சென்றார். வந்தவர் நாரதர் என்று அறிந்து அடாணா ராகத்தில் 'நாரதகானலோலா' என்னும் கீர்த்தனையைப் பாடினார்.

தியாகராஜர் அவருடைய 80-ஆம் வயதில் ஒரு நாள் காலை தம் சிஷ்யர்களைக் கூப்பிட்டு அவர்களைப் பாடும்படி சொன்னார். பின்பு அவர் அதுவே தமக்குக் கடைசி நாள் என்று கூறி கிருஹஸ்தாசிரமத்தை விட்டு ஸன்யாச ஆசிரமத்தை மேற்கொண்டார். இவர் கடைசியாகப் பாடிய கீர்த்தனை, தங்யாசி ராகத்தில் 'சியாமசுந்தராங்க' என்பதேயாகும். இதன்பின் சில விநாடிகளில் முக்திபெற்றார். சங்கீத திருமூர்த்திகளுள் சிறந்தவர் இவர். வருடந்தோறும் திருவையாற்றில் இவரது உற்சவம் சிறப்பாக நடைபெறுகிறது.

G. முத்துலக்ஷ்மி,
ஆறாம் படிவம், 'இ' பிரிவு.

பூனை வேலை செய்தது

ஒரு ஊரில் ஒரு பணக்காரன் இருந்தான். அவனுக்கு சுகுமாரி என்ற பெண்ணிருந்தாள். அவள் எந்த வேலையும் செய்யாமல் தான் வளர்த்துவரும் பூனைகளுடன் விளையாடி வந்தாள். தக்க வயது வந்ததும் கூட இந்த விளையாட்டை அவள் விடவில்லை. பெரிய பெரிய பணக்காரர்களெல்லாம் அவளைத் தங்கள் மருமகளாக்கிக் கொள்ள முயன்றனர். ஆனால் அவர்களது புத்திரர்களில் யாரையும் அவள் விவாகம் செய்து கொள்ளச் சம்மதிக்கவில்லை. கடைசியில் அவள் ஒரு அழகிய ஏழை வாலிபனை விவாகம் செய்து கொண்டாள். அவள் விவாகத்திற்கு முன் அவ்வாலிபனிடம் ஒரு நிபந்தனை விதித்தாள். அதன்படி எக்காரணத்தைக்கொண்டும் அவன் அவளை அடிக்கவோ திட்டவோ கூடாது. அவனும் அந்த நிபந்தனைக்குக் கட்டுப்பட்டே அவளை விவாகம் செய்து கொண்டான். கணவன் வீட்டில் குடிபுகுந்த சுகுமாரி எவ்வித வேலையும் செய்யாமல் தான் அருமையாக வளர்த்து வந்த பூனைக் குட்டியுடனேயே விளையாடிக் கொண்டிருந்தாள். வீட்டில் மூலைக்கு மூலை குப்பை சேரலாயிற்று. வைத்த சாமான்கள் அப்படியே இருந்தன. சுகுமாரி ஒரு வேலையும் செய்வதே இல்லை. எல்லா வேலையும் அந்த வாலிபனே செய்ய வேண்டிவந்தது. அவனும் கொஞ்ச நாட்கள் தன் மனைவியிடம் இதமாகச் சொல்லிப் பார்த்தான். திருந்துவதாகத் தோன்றவில்லை. கடைசியில் அவனுக்கு ஒரு உபாயம் தோன்றியது. அதன்படி அன்று அவன் வேலைக்குச் செல்லும்போது சுகுமாரியினருகே இருந்த பூனையைப் பார்த்து "ஏ பூனையே! இன்று நான் வருவதற்குள் வீட்டு வேலைகளையெல்லாம் செய்து சமையலும் முடித்து வைக்கவேண்டும். அப்படிச் செய்யாவிட்டால் உன்னை இன்று என்ன செய்கிறேன் பார்' என்று கூறிவிட்டுச் சென்றான். ஆனால் மாலையில் வீடு திரும்பிய போது எந்த வேலையும் செய்யப்படாதிருக்கவே அப்பூனையைப் பிடிக்கலானான். பூனையும் அவனது பிடியிலிருந்து தப்ப சுகுமாரியின் மீது பாய்ந்தது. அதனால் அவளுக்குக் காயம் ஏற்பட்டது. அந்த வாலிபனோ பூனையைப் பிடித்து நன்கு அடித்தான். அப்போது சுகுமாரி அவனைப் பார்த்து "பூனைக்கு நாம் பேசுவதெல்லாம் புரியுமா? அதை ஏன் இப்படி அடிக்கிறீர்கள்?" என்றாள். அதற்கு "எனக்கு இந்த வீட்டில் அந்த பூனையைத்தான் திட்டவும் அடிக்கவும் உரிமை உண்டு" என்று கூறி மேலும் பலமாக அடிக்கத் தொடங்கினான். அப்போது சுகுமாரி இப்படிப் பூனையை அடிப்பதால் என்ன

பிரயோஜனம்? அது செத்துப் போய்விடுமே என்று கண்ணீர் வடித்தாள். உனக்கு அதன்மீது அவ்வளவு கருணை இருந்தால் அதற்காக நீயே எல்லா வேலைகளையும் செய். இல்லாவிட்டால் தினமும் அதை நான் இப்படித்தான் அடிப்பேன் என்றான். மறு நாளும் வெளியே போகையில் பூனையிடம் முன்தினம் கூறியது போலவே சொல்லிவிட்டுச் சென்றான். சாயந்திரம் வீடு திரும்பிவந்து பார்க்கையில் அவன் எதிர்பார்த்தது போலவே சுகுமாரி பூனைக்காக எல்லா வேலைகளையும் செய்து கொண்டிருந்தாள். இவ்விதமாக அவள் நாளடைவில் திருந்தினாள்.

A. S. காமாட்சி,
மூன்றாம் படிவம், 'ஈ' பிரிவு.

எனது குறிக்கோள்

உலகில் வாழும் ஒவ்வொருவரும் தத்தம் வாழ்க்கையைச் செவ்வனே நடாத்தி வாழ்வின் பயனை அடைய நினைப்பர். 'அரிது அரிது மானிடராய்ப் பிறத்தலரிது' என ஔவையார் கூறியாங்கு, மானிடவாழ்வின் பயனை அடைய ஒவ்வொருவரும் உயர்ந்ததோர் குறிக்கோளையே கொண்டிருப்பார். 'உள்ளுவதெல்லாம் உயர்வுள்ளல்' எனக் கூறிப் போந்தார் வள்ளுவர். எண்ணங்கட்கு இங்ஙனம் உயர்ந்ததோர் நிலையினைக் கூறுதலான் எண்ணங்களாகிய குறிக்கோளின் அவசியம் யாவர்க்கும் புலனாகும்.

ஆசைக்கோர் அளவின்றி அகிலமெல்லாம் அரசாளுதலைத் தமது குறிக்கோளாகக் கொண்டனர் அரசர் பலர். உலகினை அஹிம்சையினாலும் அன்பினாலும் ஆட்கொள்ளப் பணிசெய்வதே தம் வாழ்வின் குறிக்கோளாகக் கொண்டார் மகான் காந்தி. பற்றற்றான் பற்றினைப் பற்றுதலையே தமது இலட்சியமாகக் கொண்டவரோ பல கடவுள் பக்தர்கள். இங்ஙனம் வாழ்க்கையில் உயர்ந்ததொரு குறிக்கோளைக்கொண்டே அவர்கள் அதனை அடைய முற்பட்டனர்.

இன்றைய உலகிலே, உழைப்பாளிகளின் உழைப்பிலே உயர்நிலையை அடைந்த பணக்காரன் மேலும் பணம் திரட்டுவதே தன் வாழ்நாளின் குறிக்கோளாகக் கொள்ள, ஏழை ஒருநாட் பொழுதைப்போக்க உழைப்பதையே வாழ்வின் இலட்சியமாகக் கொண்டுள்ளான். பள்ளியில் முதன்மையாகப் படித்துப் பட்டம் பெறுவதையும், பயனுறுவதையும், எண்ணுகின்றனர் மாணாக்கர். எனவே எந்தக் காலமாயினும், சூழ்நிலையாயினும், அவரவர் அறிவுக்கும், நிலைக்கும் தக்கவாறு குறிக்கோளைக் கொண்டிருப்பர்.

சிறுவயதிலிருந்தே எனக்குத் தமிழைக் கற்க வேண்டுமென்னும் அவா உண்டு. "ஆத்திசூடி," 'கொன்றைவேந்தன்' முதலியன குழந்தைப் பருவத்திலே உருப்போடும் மந்திரங்கள். அதுமுதல் தமிழ்ப் பாடங்களும், பாடல்களும், தமிழறிவில் சிறந்த ஆசிரியர்களால் கற்பிக்கப்பட்டு ஒவ்வொருவரின் உள்ளத்திலும் தமிழ் உணர்ச்சியைத் தூண்டிவிட்டுக் கொண்டிருக்கின்றன. பொன்னேபோல் போற்றிவைக்கப்பட்டிருக்கும் நூல்கள் ஆவலை அதிகமாக்குகின்றன. தமிழோசையே எங்கும் கேட்கிறோம். சூழ்நிலையே 'தமிழைப் படித்து இன்புற வேண்டும்' என்பதை எனது வாழ்வின் குறிக்கோளாக அமைத்துவிட்டது.

தமிழை நன்குகற்று அதன் பண்டைய பெருமைகளையும், புலவர்களின் புலமையையும், கவிஞர்களின் கவித்திறனையும், ஆசிரியர்களின் அறவுரைகளையும் நுகரவேண்டுமென்பதே எனது பேரவா. 'யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழிபோல் இனிதாவதெங்கும் காணோம்' என்னும் பாரதியார் வாக்கு தமிழ் மொழியின் மீது ஒரு பற்றையும் யாமறிந்த புலவரிலே வள்ளுவன்போல், இளங்கோவைப்போல், கம்பனைப்போல் காணோம் என்னும் உறுதிமொழி தமிழ் நூலாசிரியர் மீது பற்றையும் உண்டாக்குகின்றன. 'பிறமொழிப் பாடல்கள் என் செவியைத் தொட்டனவேயன்றி உள்ளத்தைத் தொடவில்லை' எனக்கூறிய சீனிவாஸாசாரியார் மொழி தமிழிசைப் பாடல்களின்

மேல் ஓர் அவாவினைத் தூண்டிவிடும் கருவியாக அமைந்துளது. தமிழ்ப் புரட்சிப் புலவர்களின் வீர முரசம் உள்ளத்திற்குப் புதிய உணர்ச்சியை யூட்டுகிறது. தமிழர் பெருமை குன்றிவிட்ட விளக்கைப்போன்று பொலிய வேண்டுமெனப் பலர் பாடுகின்றனர். தற்காலத்தில் இவையாவும் என்னைத் தமிழ் மீது பற்றுக்கொள்ளும்படி செய்தன.

தமிழைக்கற்று அதனை மற்றவர்க்கும் புகட்டும் ஆசிரியர் தொழிலே மிகவும் பிடித்தது. 'தம்மால் பிறர் அடையும் பயனே தானடையும் பயன்' என்பர் அறிஞர். கற்றதை மறவாமை, பிறர்க்கும் தான் கற்றது பயன்படல், புதியன பல அறிதல் போன்ற பல நன்மைகள் ஏற்படுவதுடன் உள்ளமும், உயிரும் நல்வழியில் வளரும்.

தமிழைக்கற்றலால் ஒருவர் நன்கு வாழும் நெறியினை அறிந்து கொள்வர். பெரியோர்களின் பெருமைகளை எடுத்துக்கூறுதல் வாயிலாக அப்பெரியார் வாழ்ந்த வாழ்க்கையினையும் கூறி நம் வாழ்வையும் செம்மையடையச் செய்வர் புலவர்கள். வீரம், ஈரம், தியாகம், உயர்ந்த மனப்பான்மைபோன்ற பண்புகளையுடைய தலைவனை உண்டாக்கி, அவன் இன்னலை அழிக்கும் வகைகளைக்கூறி நமது இன்னல்களையும் ஓரளவு அழிக்க முற்படுவர் நூலாசிரியர்கள். அறவுரைகள் பலவற்றையும் பாடல் வாயிலாக எடுத்துரைத்து நம்மை அறநெறியில் வாழ்க்கை நடத்தப் பாடுபடுவோர் பலர். காலத்திற்கேற்றவகையில் மக்களைத் தூண்டுவது தமிழ்ப் பாடல்களே. 'என்று தணியும் எங்கள் சுதந்திரதாகம்' எனப் பாடிய பாரதியார் பாடலும், 'பாயக்காண்பது சுதந்திர வெள்ளம், பணியக்காண்பது வெள்ளையர் உள்ளம்' என்னும் பாடலும் மக்கள் உணர்ச்சியைப் புரட்சிக்களனாக மாற்றுவோ ? காணவேண்டுமென்பதையெல்லாம் தமிழில் காணலாம், கண்டு களிக்கலாம் என்பதே என்கருத்து.

கடவுளையும் காணலாம் ; கவிதையையும் காணலாம் தமிழிலே. வெற்றியையும் காணலாம் ; தோல்வியையும் காணலாம். அறத்தையும், மறத்தையும் காணலாம். வீரத்தையும், ஈரத்தையும் காணலாம். யாவற்றினையும் அளிக்கும் அமிழ்தினுமினிய தமிழ் மொழியை நன்கு கற்றுப் பயனடைதலையே என் வாழ்வின் குறிக்கோளாகக் கொண்டுள்ளேன்.

க. ரமணி,
ஆறும் படிவம், 'ஈ' பிரிவு.

அலுமினியத்தின் சுயசரிதை

சகோதரிகளே, நான் யார் ? நான் எவ்வாறு உங்களுக்கு உபயோகப்படுகிறேன் ? முதலியவைகளைக்கொண்ட என் சுயசரிதையைக் கூறுகிறேன்.

நான் என் தாயாரான பூமாதேவியுடன் சுகமாக ஒரு கஷ்டமும் இல்லாமல் இருந்தேன். ஒருசமயம் சில முரடர்கள் பல ஆயுதத்தால் என்னை நன்றாக அடித்து, என்னை என் தாயிடமிருந்து பிரித்து விட்டார்கள். மிகவும் வருத்தத்துடன் அழுதுகொண்டே அந்த முரடர்களுடன் ஒரு வண்டியில் நானும் என்னுடன் இருந்தவர்களும் ஏறிக்கொண்டோம். அந்தச் சமயம் நான் செய்த பிரயாணத்தை நினைத்தால் வியப்பும், சிரிப்பும் உண்டாகின்றன. அந்த முரடர்கள் எங்களை ஒரு இடத்தில் விட்டு விட்டுச் சென்றார்கள். அங்கு வேறு சில முரடர்கள் எங்களை நன்றாகப் பழுக்கக் காய்ச்சி எங்கள் மீது இருந்த மண்ணை அகற்றினார்கள். அப்பொழுது எங்கள் தேகம் முழுவதும் வலி ஏற்பட்டது. எங்களை உலையில் காய்ச்சியதும் எங்கள் தேகம் மிகவும் மென்மையாகவும், பளபளப்பாகவும், இலேசாகவும் மாறியது. பிறகு எங்களைப் போக்குவரத்துக் கருவியாக, அதாவது நீங்கள் எங்கள்மீது உட்கார்ந்து கொண்டு வெளிநாடுகளுக்குச் சீக்கிரமாகச் செல்வதற்காக ஆகாய விமானம் என்ற பெயரில் அமைத்தார்கள். ஓர் உருவாக்குமுன்

எங்கள் மீது எவ்வளவு அடி அடித்தார்கள் தெரியுமா? நான் தான் காற்றினால் மிக உயரம் பறக்கிறேன். என்மீது நீங்கள் உட்காருவதற்கு எவ்வளவு பணம் கொடுக்கிறீர்கள்! சில சமயம் எனக்கு ஆபத்தும் நேரிடுகிறது. சில மரங்களில் மோதி நான் இறந்துவிடுவேன். மேலும், உங்கள் வீட்டில் எளிதாக வாங்க முடியும்படி நான் அவ்வளவு சிரழிந்துவிட்டேன். முன் காலத்தில் என்னை எவ்வளவு விலைகொடுத்து வாங்குவீர்கள்! ஆனால், இப்பொழுது என்னை விட இலேசாக வேறு சிலரும் என்னுடன் போட்டியிடுகிறார்கள். மின்கம்பி சுற்றுவதற்கு வேண்டிய மிக மெல்லிய தகடுகள் செய்ய நான் உபயோகப்படுகிறேன். நான் உலகில் பிரான்ஸ், ஹங்கேரி, அமெரிக்க ஐக்கியநாடு, ஜெர்மனி, ரஷ்யா, இத்தாலி முதலிய நாடுகளில் ஏராளமாகக் கிடைக்கிறேன். உங்கள் நாட்டில் மத்தியப் பிரதேசம், சென்னை, பம்பாய் பீஹார் ராஜ்யங்களில் அதிகமாகக் கிடைக்கின்றேன்.

சுரங்கத்திலிருந்து என்னை வெட்டி எடுத்து, நான் மண்ணோடு கலந்து தாதுவாய் இருக்கும்போது மண்ணிலிருந்து என்னைப் பிரித்து எடுத்தால் வருந்தி, பலர் கையால் உதை வாங்கிக்கொண்டு கடைசியில் உங்களிடம் வந்து சேருகிறேன்.

இவ்வாறு நீங்கள் என் கஷ்டத்தை உணர்ந்து பார்த்தால் என்னை உங்கள் வீட்டில் மிகவும் நேர்மையுடன் வளர்ப்பீர்கள். நீங்கள் எல்லோரும் என் கதையைக் கேட்டு விட்டீர்கள். ஆனால், நான் யார் என்பது சிலருக்குத்தெரியும், சிலருக்கு தெரியாது. நான்தான் முதலில் சுகமாக இருந்து பிறகு கஷ்டத்தை அனுபவிக்கும் உலோகம். என் பெயர்தான் அலுமினியம். நீங்கள் உங்கள் தாயைவிட்டுப் பிரிந்தால் எவ்வளவு கஷ்டப்படுகிறீர்கள்? அது போலவே நானும் என் தாயான பூமாதேவியைப் பிரிந்து கடைசியில் எவ்வளவு கஷ்டப்படுகிறேன் தெரியுமா? ஆயினும் பலருக்கு உதவியாயிருப்பதை எண்ணி ஆறுதலடைகிறேன்.

N. லலிதா,
மூன்றும் படிவம், 'இ', பிரிவு.

பொறுமையுள்ள சிறுவன்

ஓர் ஊரில் ஓர் பணக்காரர் இருந்தார். அவர், ஏழைச்சிறுவர், சிறுமியருக்கு ரொட்டி கொடுப்பது வழக்கம். இவர் ரொட்டிகளைக் கடையில் வைத்து விடுவார். சிறுவர், சிறுமியர் அதனை எடுத்துக் கொள்வார்கள்.

அவர் தினமும் ரொட்டி வைக்கும் பொழுது எல்லாச் சிறுமி, சிறுவர்களும் ஓடிப்போய் முதலில் எடுத்துக் கொள்வர். ஆனால் ஒரு சிறுவன் மட்டும் கடைசியில் எஞ்சியிருக்கும் சிறிய ரொட்டியை எடுத்துக் கொள்வான்.

இதைப் பார்த்த பணக்காரர் அவனது பொறுமையைச் சோதித்தார்.

மறுநாள் அவன் ரொட்டி எடுக்கும் பொழுதும் கடைசியிலேயே நின்று சிறிய ரொட்டியை எடுத்துக் கொண்டான். அவன் அதை வீட்டிற்குக் கொண்டுபோய் அதை இரண்டாகப் பிய்த்தான். அப்பொழுது அதன் உள்ளிருந்து ரூபாய் நாணயங்கள் இரண்டு கீழே விழுந்தன.

அவனது தாய் அந்த நாணயங்களை எடுத்துப் பணக்காரரிடம் கொண்டுபோய்க் கொடுக்கச் சொன்னாள். உடனே அச் சிறுவன் அவ்விரண்டு நாணயத்தையும் எடுத்துப் பணக்காரரிடம் கொடுத்து நடந்ததைச் சொன்னான். உடனே அப்பணக்காரர் அவன் உண்மை பேசியதற்காகவும், பொறுமையாய் இருந்ததற்காகவும் அவ்விரண்டு ரூபாய் நாணயங்களையும் அவனிடமே கொடுத்தார்.

அதைப் போல் அனைவரும் பொறுமையையும், உண்மையையும் கடைப்பிடித்து நடக்க வேண்டும்.

R. ராஜலக்ஷ்மி,
மூன்றும் படிவம், 'இ' பிரிவு.

தாழ்மையின் சிறப்பு

"தன்னைத் தாழ்த்துகிறவன் எவனும் உயர்த்தப்படுவான்"

தாழ்மை மனிதனை தாழ்நிலையிலிருந்து உயர்நிலைக்குக் கொண்டு செல்லும் பாதை. மனிதனுக்கு அவசியமான சிறந்த குணமாகும் தாழ்மை. தாழ்மையுள்ளவன் பிறர் மதிப்பைப் பெற்று வாழ்வான்.

முன்பு ஒரு சிறு கிராமத்தில் தானியேல் என்ற பெயர்கொண்ட ஒரு இடைப் பையன் தன் தாயுடன் வசித்துவந்தான். அவன் பள்ளியில் படியாவிடினும் சிறந்த அறிவும், நற்குணங்களும் நிரம்பப் பெற்றிருந்தான். அவனது நேர்மையான நடத்தையை அந்தக் கிராமத்தினர் அனைவரும் பாராட்டினர். அரசன் காதிற்கும் இவன் புகழ் எட்டியது. உடனே அவனை வரவழைத்து அவன் திறமையை மெச்சி அவனை ஒரு ஸ்தானாதிபதியாக நியமித்தார். அரசனது செய்கை உத்தியோகஸ்தர்களுக்குப் பிடிக்கவில்லை. படித்துப் பட்டம் பெற்றவர்கள் மத்தியில் படியாத இடையனை அதிகாரியாக நியமித்தது குறித்தும் பொறாமை கொண்டு ஏதேனும் குற்றஞ்சாட்டி அவனை வேலையினின்றும் நீக்க முயற்சித்தார்கள்.

தக்க சமயம் வாய்த்தது. உத்தியோகஸ்தர்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து அரசனிடம் "அரசே! தானியேல் எப்பொழுதும் தன்னுடனேயே எடுத்துச் செல்லும் மரப் பெட்டியில் மக்களிடமிருந்து உமக்குத் தெரியாமல் கற்கள், உயர்ந்த ஆடைகள், பணம் முதலியனவற்றை லஞ்சமாகப் பெற்றுச் சேர்த்து வைத்துள்ளான். உடனே அவனைச் சோதித்துத் தண்டிக்கவும்" என முறையிட்டனர். ஒருநாள் மாலை அரசன் தன் குதிரையை எடுத்துக் கொண்டு தானியேல் இருக்குமூருக்குச் சென்றான். மற்ற பிரதானிகளும் கூடச் சென்றனர். வழியில் தானியேல் தன் ஒட்டகத்தின் பின்னால் கட்டியிருக்கும் பெட்டியுடன் எதிரே வந்து கொண்டிருந்தான். உடனே அதிகாரிகள் பெட்டியைச் சுட்டிக் காட்டினர். அரசன் தானியேலிடம் சென்று பெட்டியைத் தான் பார்க்க வேண்டுமென்றும் திறந்து காட்டும் படியாகவும் கேட்டார். தானியேல் தயக்கமுற்றான். அரசனின் சந்தேகம் வலுத்தது. சேவகனை விட்டுத் திறக்குமாறு பணித்தார். பெட்டியைத் திறந்ததும் துர்நாற்றம் வீசிற்று. உள்ளே ஆட்டு ரோமத்தினால் செய்த ஆடை ஒன்றும் ஆடு மேய்க்கும் கோல் ஒன்றும் தவிர வேறெதுவும் காணவில்லை. அரசன் வியப்புற்றான்.

"தானியேல்! எதற்கு இந்த ஆட்டு ரோம உடையும், கோலும்" என வினவினான் அரசன். உடனே தானியேல் "அரசே! நீர் எனக்களித்த இந்த ஸ்தானாதிபதி பதவியினால் என் மனம் பல தடவைகள் பெருமை கொள்ள நேரிட்டது. உடனே நான் இந்தப் பெட்டியைத் திறந்து ஆடையை நோக்கி "ஏ! மனமே பெருமை கொள்ளாதே! உன் நிலை இதுவல்ல; இதோ இந்த ஆடையும், தோலுமே உன் நிலையாகும் என எச்சரித்து என் மனத்தை அடக்கிக் கொள்வேன்" என விடை பகர்ந்தான்.

உடனே அரசன் அவனது தாழ்மையை மெச்சி எல்லா ஸ்தானாதிபதிகளுக்கும் மேலான அதிகாரியாக நியமித்தான். மற்றவர்கள் இவனுக்கு அடங்கி நடக்க வேண்டிய நிலை ஏற்பட்டது.

பெருமையைக் கைவிட்டுத் தாழ்மையைக் கடைப்பிடிப்போமாக!

S. கமலாபாய்,
ஆறும் படிவம், 'இ' பிரிவு.

மூளைக்கு வேலை

1. ஒருவன் கடையிலிருந்து 2 மூட்டை தேங்காய் வாங்கிக்கொண்டு செல்கிறுன். ஒரு மூட்டைக்கு 100 தேங்காய் வீதம் 200 தேங்காய்கள் இருக்கின்றன. இவன் நூறு இடத்திற்கு வரி கொடுக்க வேண்டியிருக்கிறது. ஒரு மூட்டைக்கு ஒரு தேங்காய் வீதம் தேங்காய்கள் வரி கொடுத்துப் பிறகு தன் சமார்த்தியத்தினுல் 50 தேங்காய்கள் வீட்டிற்கு எடுத்துச் செல்கிறுன். அது எவ்வாறு ?

2. ஒருவன் சில பூமாலைகளை எடுத்துச் செல்கிறுன். அவன் ஒரு குளத்தில் ஸ்நானம் செய்கின்றுன். அப் பூமாலைகள் 2 மடங்கு ஆகின்றன. அதில் 8 பூமாலைகளைக் கோவிலிலுள்ள கடவுளுக்குப் போட்டுவிட்டு மற்ெருரு குளத்திற்குச் சென்று ஸ்நானம் செய்கிறுன். கையிலுள்ள பூமாலைகள் 2 மடங்கு ஆகின்றன. அதில் 8 ஐ எடுத்து மற்ெருரு சுவாமிக்குப் போடுகிறுன். மற்ெருரு குளத்திற்குச் சென்று ஸ்நானம் செய்கிறுன். கையிலுள்ள மாலைகள் 2 மடங்கானதும் 8 பூமாலைகளைச் சுவாமிக்குப் போட்டுவிடுகிறுன் அவன் வீட்டிற்குத் திரும்பும்பொழுது அவனிடத்தில் ஒரு பூமாலைகூட இல்லை. அப்படியாஞல் அவன் எவ்வளவு பூமாலைகள் போகும்பொழுது எடுத்துச் சென்றுன் ?

(விடை)

1. இவன் வரி கொடுப்பவர்களிடம் இரண்டு மூட்டையிலிருந்தும் இரண்டு இரண்டு தேங்காய்களாகக் கொடுத்துக்கொண்டே சென்றுன். 50 இடம் சென்றதும் ஒரு மூட்டைக்கே எல்லாத் தேங்காய்களையும் கொட்டிவிட்டான். அப்பொழுது அம்மூட்டையில் நூறு தேங்காய் இருந்தது. அதை ஒவ்வொன்ருக மற்றும் 50 இடங்களுக்குக் கொடுத்து விட்டு மீதி 50 தேங்காய்களை வீட்டிற்கு எடுத்துச் சென்றுன்.

(விடை)
2. 7 பூமாலைகள்.

T. K. சாந்தமணி,
நான்காம் படிவம் 'ஆ' பிரிவு.

விடுகதைகள்

மூடாத வாய்க்கு முழம் வால். இது என்ன ? (அகப்பை)

கடுகு மடிப்பதற்கு இலைகள் இல்லை. யானை நிற்பதற்கு நிழலுண்டு அது என்ன ? (சவுக்கு)

பார்த்தால் கல்லுதான் ; பல்லுப் பட்டால் தண்ணீர்தான் அது என்ன ? (ஐஸ்)

ஓடிப்படரும் கொடியல்ல, ஒளி மிகவுண்டு நிலவல்ல, மாடி மணைகளில் சிங்காரம் நாடு நகரெங்கும் அலங்காரம் அது என்ன? (மின்சாரம்)

பலபேர் போற்றும் பாட்டுக்காரி, பக்தியில் முதிர்ந்த பாட்டியவள்—யார் ? (ஔவையார்)

என். எஸ். சுப்பலக்ஷ்மி,
மூன்றும் படிவம் 'அ' பிரிவு.

மாதப் பாட்டு

சித்திரை பிறந்தது தென்றலும் வந்தது
பத்திரமாய் நெல்பானைகள் சிறந்தது
வைகாசி பிறந்தது ; வசந்தமும் முதிர்ந்தது
வாங்கிய மாங்கனி வழிதனில் இனிக்குது
ஆனியும் பிறந்தது ; ஆழ்கடல் தூங்குது
அவனியும் உழுதலை அயர்ந்தது கலப்பையும்
ஆடி பிறந்தது ; அடித்தது காற்றுடன்
ஆடின மரங்களும் ; ஆறுகள் பெருகவே
ஆவணி பிறந்தது ; அவிட்டமும் வந்தது
ஆவென மேகமும் ஆர்வத்துடன் இடித்தது
புரட்டாசி பிறந்தது ; புதுவரப் புயர்ந்தது
திரட்டிய பொம்மைகள் திருக்கொலு இருக்குது
ஐப்பசி பிறந்தது ; அடை மழை குழப்புது
தப்பிலை பட்டாசும் தவருமல் வெடிக்குது
கார்த்திகை பிறந்தது ; காடை விளக்குகள்
நேர்த்தியாய் எரியுது நெற்பொரி பறக்குது
மார்கழி பிறந்தது ; மணக்குது களியது
பார் திருவாதிரை பஜனைகள் முழங்குது
தையது பிறந்தது ; தாழியும் பொங்கிட
கையது கொட்டியே கன்னியர் பாடுவர்
மாசியும் பிறந்தது ; மகமுடன் இருந்தது
காசுமே நின்றது கழனியும் வளர்ந்தது
பங்குனி பிறந்தது ; பால் வடு தொங்குது
அங்கொரு உத்திரம் அழகாய் அமைந்தது.

S. K. ராதா,
நான்காம் படிவம் 'ஈ' பிரிவு.

தமாஷ் பேச்சு

விமலா :—ஏன்டி கமலா, உன்னுடைய அப்பா தொழிலாளியா ? முதலாளியா ?
கமலா :—இரண்டும் இல்லேடி ; செலவாளி.

* * * * *

தையற்காரன் மனைவி :—என்னங்க ஞாபகமறந்தியாக் கையில் கத்தரிக்கோலை எடுத்து வந்திட்டீங்க.
தையற்காரன் :—நான் ஒன்றும் மறக்கவில்லை. நீ செய்யப்போகும் சப்பாத்தியைக் கத்திரிக்கத்தான் எடுத்துவந்தேன்.

* * * * *

வாத்தியார் :—ஏண்டா ராமு, சூரியனுல் நமக்கு என்ன பயன்.
ராமு :—பாதி மண்ணெண்ணெய் லாபம் ஸார் ?

N. A. அலமேலு,
மூன்றும் படிவம் 'உ' பிரிவு.

॥ परोपकार ॥

"स्व" और "पर" का विभेद ही माया है। हम अपने और पराये का बहुत भेद-भाव किया करते हैं और जीवन में अधिकांश कर्म अपने और अपन लिए ही किया करते हैं ॥ किन्तु "स्वत्व" की इस संकुचित परिधि से बाहर आकर "पर" का आलिंगन करना अपनी मनुष्यता का परिचय देना है। ज्ञानदृष्टिसंपन्न महानुभाव वसुधा को कुटुम्ब समझने की साधना किया करते हैं। मनुष्य मात्र को दूसरों के सुख-दुख का ध्यान होना अपेक्षित हैं। सुख और दुख तो सभी पर पडते रहते हैं, दुख में हम दूसरों की सहायता चाहते हैं अतएव हमें भी दूसरों के दुख को हलका करने का प्रयत्न करना चाहिए, अपने पेट तो सभी भर लेते हैं हमें तो दूसरों का भी ध्यान करना चाहिए। मानव के सामूहिक मंगल के लिए परोपकार भावना की अत्यधिक वृद्धि नितान्त आवश्यक है। परोपकार-भाव ही समाज की स्थिति का मूलाधार है।

प्रकृति में यदि देखें तो परोपकार की यह शुद्ध बुद्धि सर्वत्र ही दृष्टिगोचर होती है, मेघ हमारे लिए जल बरसाता है। वसुन्धरा अपने प्राणों का रस निचोड़ कर हमारा पेट भरती हैं। शीतातप का सहन करते हुए वृक्ष हमें फल देते हैं, गाएँ हमें दूध देती हैं। बैल हमारे खेत जोतते हैं, हाथी ऊँट घोडे आदि हमारा बहुत काम करते हैं और बेचारा कुत्ता हमारे घर की रखवाली करता है। सृष्टि के पंचभूत परोपकार से सहानुभूति में ही अविश्रान्तभाव से लगे हुए हैं। इसी को लक्ष्यकर भर्तृहरि के मुख से निकल पडा था—

परोपकाराय फलन्ति वृक्षाः
परोपकाराय वहन्ति नद्यः
परोपकाराय दुहन्ति गावः
परोपकाराय सतां विभूतयः

इस तरह सज्जनों की सम्पूर्णा।

विभूति हो परोपकार के लिए होती है। मनुष्य को इस तत्व से शिक्षा लेनी चाहिए।

एस. पद्मावती,
III Form, E.

॥ दशहरा ॥

हमारे देश के त्योहारों में दशहरा एक मशहूर त्योहार है।—सभी प्रांतों में यह धूमधाम के साथ मनाया जाता है। यह दस रातों का त्योहार है। इन दिनों में उत्तर हिन्दुस्तान में राम लीला मनाई जाती है। उसमें बडी रौनक रहती है। कलकत्ते में दुर्गा की पूजा की जाती है। दशहरे को विजयदशमी भी कहते हैं।

यह त्योहार पांडवों के अज्ञातवास से शुरू हुआ है। दशहरे के दिन अर्जुनने शमी वृक्ष से अपने बाण और धनुष निकाले थे। उसने कौरवों से लड़ाई करके उन पर विजय पाई थी। इसलिए उसका नाम विजयदशमी पड़ा।

मैसूर में यह त्योहार बडी धूमधाम से मनाया जाता है। दूर-दूर के लोग उन दिनों में मैसूर देखने के लिए आते हैं।

दशहरे के दिन आन्ध्र प्रांत के लोग अपने अध्यापकों को द्रव्य देते हैं। पाठशाला के बच्चों को नारियल और शक्कर आदि से खुश करते हैं। पाठशालों के बच्चे खूब सज-धज कर अपने अध्यापकों के साथ घर घर जाते हैं। गृहस्थ लोग अध्यापकों का खूब सत्कार करते हैं।

जि. जयलक्ष्मी,
V Form, B.

॥ काव्यकण्ठ गणपतिसूरि चरित्र संग्रहः ॥

आन्ध्र देशे बोब्बिलि संस्थानोपान्ते 'कलवरायि' (कुमुदोपलम्) नाम ग्रामो वर्तते। तत्र नरसिंहशास्त्री इति विख्यातः एकः पण्डितः आसीत्। तस्य भार्या नरसमाम्बा। अनयोः गणपतिः नाम पुत्रः बभूव। एष बालकः बाल्यात्प्रभृति पाठशालायां अतिचतुरः आसीत्। सप्तवर्षवयस्कस्य तस्य बालरामायणादिग्रन्थाः कण्ठस्थाः अभवन्। बालक्रीडास्वपि गणपतिः ग्रामस्य नायको बभूव।

अस्य दशमे वर्षे कवित्वाभ्यासे अयं प्रथमः श्लोकः—

"जगद् गुरू नहं वन्दे ब्रह्म-विष्णु महेश्वरान्।
वाणी-लक्ष्मी-शिवानाथान् सृष्टि स्थित्यन्तकारिणः॥"

तस्मिन्नेववर्षे लघुपाराशरी श्रीपतिपाठौ समाप्तौ। एकादशाब्दपूर्तेः पूर्वमेव रघुवंश-कुमारसम्भव-मेघदूतादि काव्यानि अस्य मुखस्थानि अभवन्। चतुर्दशवर्षदेशीयस्य अस्य आशु धाराकारा कविता विलसितुं उपाक्रमिष्ट। संस्कृतभाषायां सरलं भाषितुं, गद्यानि पद्यानि वा अविलम्बं रचयितुं आसीदस्य कौशलम्। अष्टादश वर्षावधि वैयाकरण सिद्धान्त कौमुदीं अधीयानः बभूव। "विंशत्यब्दे विश्रुत नानाविद्यावयः" इति वेदान्तदेशिकवत् प्रकाशते स्म युवा गणपतिः!

स्वग्रामे विद्यां परिसमाप्य गणपतिः गौडदेशे नवद्वीपपुरीं अगच्छत्। तत्र तस्य पाण्डित्यं पण्डित परिषदि परीक्षणक्षमं इति निरणायि। आगतः परिषत्परीक्षा दिवसः। शरीरेण कृशः अस्माकं युवा गणपतिः समृद्धः साहित्यसम्पदा भुवनमेव तृणीकुर्वन्त्या दृष्ट्या ज्वलितः सभां प्रविष्टः। ततः समारब्धा परीक्षा। पद्यपूरणाय दत्ताः समस्याः। अस्माकं युवा कविश्च तत्सदस्येव उत्तरार्धेन पद्यानि अपूरयत्। अथ परीक्षायाः समाप्तौ परीक्षां तीर्णवन्तं सभापतिः रसिकाग्रगण्यः अम्बिकादत्तः गणपतिं वृद्धः युवानं आश्लिष्यन् आमोद वचनैः सन्तृप्तिं प्राचीकटत्। उत्थानपूर्वं तत्रायं "काव्यकण्ठ" इति उपहारः अस्मै परिषदा दत्तः।

अनन्तरं एषः "वासिष्ठ गणपति मुनि" रिति विख्यातः, तपोधनः तेजस्वी कविसार्वभौमश्च अभवत्। बहवः स्तोत्रग्रन्थाः वेदान्त ग्रन्थाश्च अनेन रचिताः। एवं स्वतेजसा रमणीय कवितया च अष्टपञ्चाशब्दकालं भारत-भूवलयं आसाद्य वासिष्ठः काव्यकण्ठगणपतिमुनिः आचार्यः स्वभुवमवाप। काव्यकण्ठः विजयतेतराम्।

टि. वि. विजयलक्ष्मी,
VI Form, B.

॥ कालिदासस्य चातुर्यम् ॥

कदाचित् भोजेन विलासार्थं नूतनं गृहान्तरमेकं निर्मितम्। तस्मिन् गृहे गृहप्रवेशाधोषणात् पूर्वं एकः ब्रह्मराक्षसः प्रविष्टः। सच रात्रौ ये तत्र अवसन् तान् भक्षयन् आसीत्। ततः राजा मान्त्रिकान् आहूय तदुच्चाटनाय प्रैरयत्। स तु आगच्छत एव मान्त्रिकान् अभक्षयत्। किञ्च-यावत् सः कञ्चन पुरुषं पश्यति, तावत् चतस्रः समस्याः पठति, 'सर्वस्य द्वे' 'वृद्धो यूना' 'एको गोत्रे' 'स्त्रीपुंवच्च' इति। यदि स्वेन चिन्तितमुत्तरं न दीयते तर्हि स पुरुषः तेन सद्य एव हन्यते। बहवः पण्डिताः एतानि पाणिनि-सूत्राणि मन्यमानाः महता प्रयासेन व्याख्यातुं आरभन्त। हन्त! सर्वेऽपि ब्रह्मराक्षसेन यमधर्मराजस्य उपायनीकृताः।

अत्रान्तरे कालिदासः भोजं प्राह—"देव नूनमयं राक्षसः सकलशास्त्रप्रवीणः सुकविश्च भाति। अतस्तं तोषयित्वैव कार्यं साधयामि" इति। ततः स्वयं तत्र रात्रौ गत्वा अशेत।

ततः प्रथमयामे ब्रह्मराक्षसः समागतः। सच 'पूर्वं आगतं कालिदासं दृष्ट्वा—'अयं नूतनः पुरुषोऽतो मया समस्या पठनीया। न चेद्व्यक्ति अभीष्टमुत्तरं हन्तव्यः एव" इति निश्चित्य अपठत्—"सर्वस्य द्वे" इति। तदा कालिदासः प्राह—"सुमतिकुमती सम्पदापत्तिहेतू" इति। ततः सः गतः।

पुनरपि द्वितीययामे समागत्य कालिदासं दृष्ट्वा अपठत्— "वृद्धो यूना" इति। तदा कविना भणितं—"सहपरिचयात्त्यज्यते कामिनीभिः" इति। ततः सः अगच्छत्।

तृतीये यामे पुनरपि आगत्य, ब्रह्मराक्षसः अपठत्— "एको गोत्रे" इति। तदा कविः ऊचिवान्—"प्रभवति पुमान् यः कुटुम्बं बिभर्ति" इति ॥

पुनरपि राक्षसः चतुर्थयामे आगत्य अपठत्-"स्त्रीपुंवच्च" इति। तदा कविकोकिलेनोक्तं—प्रभवति यदा तद्धि गेहं विनष्टम्" इति। ततः प्रभातसमये आगत्य तं कालिदासं निश्चित्य प्राह—'सुमते! तुष्टोऽस्मि। किं तव अभीष्टं" इति। कालिदासः प्रोवाच—"भगवन्! यदि प्रीतोऽसि तर्हि अमुं गृहं जहीहि" इति। सः राक्षसोऽपि तथेत्युक्त्वा अन्यत्र गतवान्। कविरपि भोजराजं प्राप्य वार्तां न्यवेदयत्। तेन सन्तुष्टः भोजः कवितिलकं अतीव बहुमेने।

तदाप्रभृति इदं आभाणकचतुष्टयं सर्वस्यापि सहृदयलोकस्य आह्लाददायि समैः जनैः जेगीयते।

सर्वस्य द्वे सुमतिकुमती संपदापत्तिहेतू
वृद्धो यूना सहपरिचयात् त्यज्यते कामिनीभिः।
एको गोत्रे प्रभवति पुमान् यः कुटुम्बं बिभर्ति
स्त्रीपुंवच्च प्रभवति यदा तद्धि गेहं विनष्टम् ॥

॥ शुभं भूयात् ॥

इत्थं

पी. जी. कमला,

V Form, B.

1956

THE UNIVERSITY TUTORIAL COLLEGE

(Sama Rao School Premises)

37, SINGARACHARI STREET, TRIPLICANE, MADRAS.

(ESTABLISHED 1939)

This college coaches students for the following Examinations to be held in MARCH 1956.

1. S. S. L. C. 2. MATRICULATION & 3. INTERMEDIATE

Special Rapid Revision Classes in all the subjects for the benefit of the S. S. L. C. Pupils taking the March '56 Exam. begin from 1-12-'55.

Separate Classes for girl pupils & **All subjects taught in English or Tamil**

Efficient coaching and individual attention guaranteed.

Classes : Morning & Evening Hours

Join at once and make sure of your success in the ensuing Exams.

For further Particulars apply to : DIRECTOR

Printed by C. Krishnamurthi at the Ramakrishna Printing Works, 19/B, Woods Road, Madras-2, and Published by Sri N. K. Thirumalachariar at the National High School (Girls) Triplicane.

Editor : S. SAROJINI.